# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 35 /2022** **நாள்: 09.02.2022**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல், 2022**

**தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நட்சத்திர பேச்சாளர்களின் தேர்தல் பிரச்சார வாகனஅனுமதி (VEHICLE PERMIT) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும்.**

நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் தொடர்பாக தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்படும் மூன்று சக்கர வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களுக்கும், ஒலிபெருக்கிகளுடன் கூடிய வாகனங்களைப் பயன்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை **(Vehicle Permit)** மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அனுமதி கடிதத்துடன், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும். இது குறித்து ஏற்கனவே சுற்றறிக்கை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது- (சுற்றறிக்கை எண். C-182/2021. நாள் 17.12.2021 மற்றும் சுற்றறிக்கை எண். C-37/2022, நாள் 09.02.2022)

தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நட்சத்திர பேச்சாளர்களின் தேர்தல் பிரச்சார வாகனங்களுக்கான அனுமதி **(Vehicle Permit)** தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் வாகன அனுமதியினை வாகனத்தின் முன்புறக் கண்ணாடி மீது நன்கு தெரியும்படி ஒட்டி வைக்க வேண்டும். மேற்கண்ட வாகனங்களுக்கான அனுமதி பெறப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

9/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்